# வியாகுல மாமரியே

வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதாயோ (2)

பன்னிரு வயதில் ஆலயத்தில்
அன்று அறிஞர்கள் புகழ்ந்தவரை (2)
கரங்களை விரித்தே கள்வனைப்போல்
கழுமரத்தினில் கண்டதினால்

வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதாயோ

திருமணப் பந்தியில் கனி இரசமே
அன்று அருளிய திருமகனை (2)
குருதி சிந்தி கடற்காடியினை
இன்று பருகிடக் கண்டதினால்

வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதாயோ

கண்ணீரே சிந்திய மனிதருக்கு
அருள் பண்ணிய திருமகனே (2)
மண்ணவர்க்காகத் தன்னுயிரை
இன்று மாய்த்திடக் கண்டதினால்

வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதாயோ (2)